மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியும் முதல் கேள்வியிலிருந்து எழுவது அல்ல. இருந்தாலும், விளக்குவதற்காக நான் விடையளிக்க விரும்புகிறேன். மருத்துவக் கல்வியினுடைய தரம் உயர்த்தப்படுவதில் தமிழ்நாடு அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. 'தொடர்ந்து' என்றால், முன்னும் கவனம் செலுத்தி வந்திருக்கிறது, இனியும் கவனம் செலுத்தும்—வசதிக்கேற்ப—நிதி நிலைமைக்கேற்ப, அப்படி மருத்துவக் கல்வியினுடைய தரத்தை உயர்த்துவது, கல்விப் பயிற்சியினுடைய நிலையை உயர்த்துவது என்பது மட்டுமல்லாமல், தரம் தாழ்ந்து போவதற்குக் காரணம் அதிக மாணவர்களைச் சேர்ப்பது என்ற நிலைமை இருந்தது தவிர்க்கப்படவேண்டும் என்பதற்காக, ஓரளவு மட்டும் அந்த மாணவர்களுடைய எண்ணிக்கை இப்பொழுது குறைக்கப்பட்டிருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know whether there is any proposal to revise the norms that have been prescribed by the Mudaliar Committee?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு கொள்கை அரசாங்கத்திற்கு ஆலோசனையாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அதை மாற்ற வேண்டுமானால் அதற்குத் தக்க காரணங்கள் வேண்டும். தக்க காரணங்கள் இருப்பதாக அரசு கருதவில்லை.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : தலைவர் அவர்களே, 'தகுதி' என்று குறிப்பிடப்பட்டிருப்பதற்கு விளக்கம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதை அறிந்துகொள்கிற அவரவர் தகுதியைப் பொறுத்தது.

அவலூர்பேட்டை மருத்துவமனைக்கு மருந்து விநியோகம்.

* 4 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

செஞ்சி வட்டம், அவலூர்பேட்டையில் உள்ள ஆரம்ப சுகாதார மருத்துவ மனைக்குத் தேவையான மருந்துகளை அரசே நேரிடையாக வழங்க ஏற்பாடு செய்யும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : செஞ்சி வட்டம், அவலூர் பேட்டையில் ஆரம்ப சுகாதார மருத்துவமனை என்ற பெயரால் ஒரு மருத்துவமனை இல்லை. ஊராட்சி மருத்துவமனை ஒன்று மட்டுமே உள்ளது. பொதுவாக ஊராட்சி மருத்துவ மனைகளுக்குத் தேவையான மருந்துகளை, அரசினரே நேரடியாக வழங்க ஏற்பாடு செய்யும் திட்டமொன்று அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.